Ministry of Education
(கல்வி அமைச்சு)
Minister (அமைச்சர்)

315 Front Street West
Toronto ON  M7A 0B8

Ministère de l'Éducation

Ministre

315, rue Front Ouest
Toronto ON  M7A 0B8

Ontario

அன்பான ஒன்ராறியோப் பெற்றோரே,

வழமைக்கு வித்தியாசமான ஒரு நேரத்தில் இதை நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

**எங்களின் மாணவர்கள் மற்றும் கல்விபுகட்டுபவர்கள் உள்ளடங்கலான அனைத்து ஒன்ராறியோ மக்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதே அரசாங்கத்தின் மிக முக்கியமான முன்னுரிமையாகும்.** எங்களின் பங்காளர்களுடனும், அரசாங்கத்தின் அனைத்து மட்டத்தினருடனும் இணைந்து அவசியமான இந்த விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய அனைத்தையும் நாங்கள் செய்வோம்.

COVID-19 பற்றி முதலில் நாங்கள் அறிந்ததிலிருந்து, ஒன்ராறியோ மக்கள் அனைவரினதும் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் பாதுகாப்பதற்காக மாறிவரும் நிலைமைகளை ஒன்ராறியோ மிகவும் கவனமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. எந்தவொரு சூழ்நிலைக்கும் மாகாணம் தயாராக இருப்பதை உறுதிசெய்வதற்கும் நாங்கள் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அதனால்தான், ஒன்ராறியோவின் ஆரோக்கியத்துக்கான தலைமை மருத்துவ அதிகாரி Dr. David Williams அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் மாகாணத்தில் அரச நிதியுதவி பெறும் அனைத்துப் பாடசாலைகளையும் ஏப்ரல் 6, 2020 வரை மூடும்படி ஒரு அமைச்சரவை உத்தரவை மார்ச் 12, 2020 அன்று, நான் பிறப்பித்தேன். COVID-19 பரவுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் – இந்தத் தொழில்துறைமயமாக்கப்பட்ட உலகத்தில் உள்ள அதிகார வரம்புகளில் ஒன்றான பாடசாலைகளை மூடும் – முதலாவது தீர்க்கமான நடவடிக்கையை எங்களின் அரசாங்கமே எடுத்தது.

கனடாவில் அவசரகால நிலையை அறிவித்த முதல் மாகாணமும் நாங்கள் தான். சேவைபெறுநர்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் தீரம் மிக்க பணியாளர்கள் தொடர்ந்தும் அந்தச் சவாலை முழுமையாக எதிர்கொள்வதற்கு ஆதரவளிக்கும் மாகாணத்தின் திறனை, ஒன்ராறியோவின் ***Emergency Management and Civil Protection Act (அவசரகாலநிலை மேலாண்மை மற்றும் மக்கள் பாதுகாப்புச் சட்டம்)*** இன் கீழான இந்தப் பிரகடனம் மேம்படுத்துகிறது.

நிச்சயமற்ற தன்மை ஒன்றினால் இந்தக் காலகட்டம் சூழப்பட்டிருக்கின்ற இந்த வேளையில், அனேகமான பெற்றோர்களிடம் இருக்குமென நான் நினைக்கும் கேள்விகளில் சிலவற்றுக்கான பதில்களை இந்தக் கடிதம் வழங்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

பெரும்பாலும், உடல்ரீதியான பாதிப்புக்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு இந்த வைரஸ் பேசப்பட்டாலும்கூட, உங்களின் பிள்ளைகள், குறிப்பாக எங்களின் இளம் மாணவர்கள் உணரக்கூடிய பயம்

.../ப2

மற்றும் கரிசனைகளை நாங்கள் அங்கீகரித்து, அவற்றுக்குப் பதிலளிப்பது அவசியமென நான் நினைக்கிறேன். பதில்களுக்கும் மேலாக, அதிகமாக கேள்விகளுக்கே வழிவகுக்கும் நிச்சயமற்ற தன்மை மற்றும் ஊடகங்களுக்கான அதீத வெளிப்பாடு என்பன இந்த எதிர்வினைகளுக்கு காரணமாக இருக்கிறதென அவர்களில் பலரிடமிருந்தும் அவர்களின் பெற்றோரிடமிருந்தும் நாங்கள் நேரடியாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்த நேரத்தில், COVID-19 பற்றி உங்களின் பிள்ளைகளுடன் தொடர்ந்து ஊடாட்டம் உள்ள உரையாடல்களை நடத்தும்படி உங்களை நான் ஊக்குவிக்கிறேன், அத்துடன் இந்தக் காலகட்டத்துக்கான அவர்களின் எதிர்வினைகள் - எவ்வளவு உணர்ச்சிவசப்பட்டவையாக இருந்தாலும் – அவை விளங்கிக்கொள்ளக்கூடியவை அத்துடன் அவை இயல்பானவை என்பதை அங்கீகரியுங்கள். உங்களுக்கும் உங்களின் பிள்ளைகளுக்குமென பல ஆதாரவளங்கள் இருக்கின்றன, குறிப்பாக Kids Help Phone (பிள்ளைகளுக்கான உதவித் தொலைபேசி இணைப்பு), இது கனடாவின் ஒரேயொரு 24/7 தேசிய ஆதரவுச் சேவையாகும். அவர்கள் நிபுணத்துவ கவுன்சலிங், தகவல்கள் மற்றும் பரிந்துரைப்புகள் மற்றும் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் தன்னார்வத் தொண்டர்களினால் நடாத்தப்படும் இளையோருக்கான குறுஞ்செய்தி (text) ஊடான ஆதரவு என்பவற்றை வழங்குகிறார்கள். தயவுசெய்து அவர்களின் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்: www.kidshelpphone.ca, அழையுங்கள்: 1-800-668-6868, அல்லது 686868 க்கு CONNECT (தொடர்புகொள்) எனக் குறுஞ்செய்தி அனுப்புங்கள்.

உங்களின் பிள்ளைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு எனது முன்னுரிமையாக இருக்கும் அதேவேளையில், வகுப்பறையில் மாணவர்கள் இல்லாதபோது அவர்கள் கற்றலைத் தொடர்வதை நாங்கள் எவ்வாறு உறுதிப்படுத்துவோம் என உங்களில் பலர் யோசிக்கிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

உங்களின் பிள்ளைகளின் தொடர்ச்சியான கற்றலை உறுதிசெய்வதற்கான ஒரு முதல்படியாக, பாலர் வகுப்பு (Kindergarten) முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் அனைவருக்குமான பல்வேறு வகையான கல்வி வளச் சேகரிப்புகளுக்கும் அணுகலுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் ஓர் இணைய நுழைவாயிலை எங்களின் அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது.

பாடசாலைக்கு வராமல் இருக்கும் நேரத்தில் ஒவ்வொரு தர மட்டத்திலும் இருக்கும் மாணவர்கள் கற்றலைத் தொடர்வதற்கு Ontario.ca/learnathome இல் உள்ள இந்த இணைய நுழைவாசல் உதவிசெய்கிறது. இந்த வளங்கள் ஒன்ராறியோக் கல்வியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளன, அத்துடன் அனைத்துத் தரங்களுக்கான வளங்களும் அறிவுறுத்தல்கள் கொண்ட வழிகாட்டல்கள் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றன. இரண்டாம்தரப் பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு, ஒன்ராறியோப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இணையக் கற்கைகளுக்கான அணுகலை நாங்கள் வழங்குகிறோம்.

ஏப்ரல் 6 வரைக்கும் அரச நிதியளிக்கப்படும் பாடசாலைகள் மூடப்பட்டிருக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தாலும், COVID-19 தொடர்பான நிலைமைகள் மிகவும் விரைவாக மாறிவருவதால், தேவையாயின் மூடப்பட்டிருக்கும் அந்தக் காலத்தை மேலும் நீடிப்பதற்கும் நாங்கள் தயாராகி வருகிறோம்.

.../ப3

குறிப்பாக, வகுப்பறை அமைப்பில் எங்களால் இருக்கமுடியாவிட்டாலும் கூட, மாணவர்கள் அவர்களது கற்கை நெறி மற்றும் credit திரட்டலைத் தொடரக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் செயல்பட்டு வருகிறோம். பரந்தளவிலான இணையக் கற்கைகள் கிடைக்கும் இடங்களில் ஒன்ராறியோ முன்னணியில் இருக்கிறது, எனவே மாணவர்களின் கற்றல் மற்றும் விருத்தியை மேம்படுத்துவதற்காக இந்த வசதிகள் மற்றும் பிற வளங்களை நாங்கள் தொடர்ந்து பயன்படுத்துவோம். தற்போது கணினிகளுக்கான அணுகல் இல்லாத மாணவர்கள் பங்கேற்பதற்குத் தேவையான தொழில்நுட்பத்தைப் பெறுவதை உறுதிசெய்வதற்காகப் பாடசாலைச் சபைகளுடன் இணைந்து நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

பாடசாலைக் காலத்தை நிறைவுசெய்யும் நிலையிலுள்ள பிள்ளைகளுடன் இருப்பவர்களுக்கு, பாடசாலைக் கல்வியை இந்த மாணவர்களால் பூர்த்திசெய்ய முடியுமா என்பது குறித்த நிச்சயமற்ற நிலை இருக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம். இதனை நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம்: பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்யக்கூடிய திறனுள்ள மாணவர் எவரும் இந்த இரண்டு வார கால மூடல் மற்றும் COVID- 19 நிலைமைகளால் பாதிக்கப்படமாட்டார்கள். உதாரணத்துக்கு, இந்தப் பாடசாலை ஆண்டிற்கான EQAO மதிப்பீடுகளை நான் ரத்து செய்திருக்கிறேன். பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்வதற்கான தேவைகளிலும் மாற்றமொன்றுக்கு நான் ஒப்புதல் அளித்துள்ளேன், எனவே ஒன்ராறியோ இரண்டாம் தரப் பாடசாலை எழுத்தறிவுப் பரீட்சை (OSSLT) பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்வதற்குத் தயாராக இருக்கும் நிலைக்கு ஒரு தடையாக அமையமாட்டாது. இந்த semester (அரையாண்டு) நிலைமை எதுவாக இருந்தாலும், பாடசாலைக் கல்விக்குப் பின்பான கல்விக்கு (தொழில் பயிற்சி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக) மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக அமைச்சு மற்றும் தொழிலாளர், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சு ஆகியவற்றுடனும் நாங்கள் தொடர்புற்று உள்ளோம்.

மாணவர்கள் வகுப்பிற்குத் திரும்பும்போது, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான ஒரு கற்றல் சூழலுக்குத் அவர்கள் திரும்புவதை உறுதிசெய்வதற்கான முன்னெச்சரிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மேற்கொள்ளவேண்டியது முன்னெப்போதையும்விட தற்போது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

பாடசாலைச் சூழல்கள், பிள்ளைப்பராமரிப்பு மையங்கள் மற்றும் பாடசாலைப் பேருந்துகளை முழுமையாகச் சுத்தம் செய்வதற்கான நிதி வசதியை அனைத்துப் பாடசாலைச் சபைகளுக்கும் கல்வி அமைச்சு வழங்குகிறது. மூடப்பட்டிருக்கும் காலத்தைத் தொடர்ந்து, மாணவர்கள், கற்பவர்கள் மற்றும் எங்கள் கல்வியாளர்களுக்கான ஆபத்துகளை நாங்கள் மிகவும் குறைப்போம்.

கனடாவுக்கு வெளியேயான பயணத்திலிருந்து திரும்பி வருபவர்கள், ஒன்ராறியோவின் ஆரோக்கியத்துக்கான தலைமை மருத்துவ அதிகாரி Dr. Williams இன் வலுவான பரிந்துரைப்புக்களைப் பின்பற்றுவது மிகவும் முக்கியமாகும், நீங்களும் உங்கள் குடும்பத்தவர்களும் திரும்பிவந்ததும் உங்களை நீங்களே 14 நாட்களுக்கு தனிமைப்படுத்துங்கள். உங்களுடன்  பயணம்செய்யாத உங்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு அல்லது

உங்களின் சமூகத்தினருக்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக வீட்டிலேயே தங்கியிருத்தல் மற்றும் மற்றவர்களுடன் தொடர்பைத் தவிர்த்தல் என்பன இதன் பொருளாகும்.

உங்களுக்கோ அல்லது ஒரு குடும்ப உறுப்பினருக்கோ கொரோனா வைரஸ் (COVID-19) அறிகுறிகள் இருப்பதாக அல்லது அந்த அறிகுறிகள் உள்ள ஒருவருடன் நீங்களோ அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவரோ நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பதாக நீங்கள் நினைத்தால், உங்களைத் தனிமைப்படுத்துவதுடன், மேலதிக கவனிப்பை எவ்வாறு பெறுவது என்பதைத் தீர்மானிக்க உதவுவதற்காக ontario.ca/coronavirus இல் தயவுசெய்து சுய மதிப்பீட்டு பரிசோதனை ஒன்றையும் மேற்கொள்ளுங்கள். உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்கு உங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் இந்தத் தளம் உங்களுக்கு வழங்கும்.

சவாலான இந்த நேரத்தில் ஒன்ராறியோ மக்கள் அனைவரும் தொடர்ந்து பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் இருப்பதை உறுதிசெய்வதற்கு ஒன்ராறியோ அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. விஞ்ஞான உண்மைகள், பொதுச் சுகாதார நிபுணர்களின் சிறந்த ஆலோசனைகள் மற்றும் உங்கள் பிள்ளையின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை எப்போதும் முதலில் மனதில் நிறுத்திக் கொண்டு கல்வி அமைச்சராக முடிவுகளை எடுப்பேன் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

எங்களின் பணி தொடரும் அதேவேளையில், உங்களுக்கு நாங்கள் தொடர்ந்து அறிவிப்போம்.

பாதுகாப்பாக இருங்கள்.



The Honourable (மாண்புமிக்க) Stephen Lecce
Minister of Education (கல்வி அமைச்சு)